II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 345 of 2014**

Deposition of witness for the Respondent / RW1
Respondent solemnly by S.Ramanujam, Translator
in accordance with the provision of Act I for 1873 on 25.09.2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Saranraj | Caste | : | |
| Father's / Husband's Name | : | Elumalai | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

<u>முதல் விசாரணை=</u>

நான் தற்போது சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் கவுன்சிலராக பணிசெய்கிறேன். நான் விபத்து ஏற்பட்ட வாகனத்தில், நானும், ஒரு பயணியாக பயணம் செய்தேன். அந்த சயமயத்தில் நாங்கள் டிரைவர் உட்பட, 7 பேர் பயணம் செய்தோம். நாங்கள் ஒரு திருமணத்திற்கான சென்றோம். திருமணம் முடித்து திரும்பி காரில் வரும் போது, எந்த இடம் என்று தெரியவில்லை. நான் கண்விழித்து வந்துகொண்டிருந்தேன். சுமார் இரவு 8 முதல் 9 1/2 மணி அளவில் இருக்கும். எங்கள் காருக்கு முன்னே சாலையில் ஒரு லாரி போய் கொண்டிருந்தது போல் இருந்தது. அருகில் சென்ற போது தான் லாரி நின்று இருப்பது தெரிந்தது. லாரியில் பின் சமிக்கை விளக்குகள் எதுவும் எரிந்துகொண்டிருக்கவில்லை. ரோட்டின் இடது ஓரத்தில் லாரி நின்றிருந்தது. அப்போது டிரைவர் லாரி மூவிங்கில் இல்லை என்று சத்தம் போட்டார், சத்தம் மட்டும் தான் கேட்டது. அதன்பின் எனக்கு காயம் ஏற்பட்டது தான் தெரிந்தது. என்ன நடந்தது என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. லாரியின் மீது நடவடிக்கை எடுக்காமல் கார் டிரைவர் மீது நடவடிககை

எடுக்கதாதால் காவல் கண்காணிபாளர் மீது புகார் கொடுத்தேன்.

மனுதாரர் வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.